**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். DVC 14 /2023**
**வழக்கு சாட்சி. அ.சா.2**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** : | சுகந்தினி | **வயது** : | 47 /2026 |
| **கணவர் பெயர்** : | முத்துக்குமார் | **தாலுகா** : | |
| **கிராமம்** : | தந்தாணி | **தொழில்** : | |

**Solemnly affirmed by Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873.**

**As per Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identiy of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**<u>தேதி : 23.03.2026</u>**

**எதிர் மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. எனது மகளுக்கு அரசு மருத்துவமனையில் பிரசவம் பார்க்கப்பட்டது. என் பேரனை எதிர்மனுதாரர் வீட்டில் இருந்த மனுதாரர் வீட்டிற்கு எப்பொழுது அழைத்து வந்தோம் என்றால், சரியல்ல, எதிர்மனுதாரர்கள் தான் எனது மகளையும், பேரனை விரட்டிவிட்டார்கள். எனது மகள் பிரமாண பத்திரிக்கையில் சபையில் 15 பவுன் நகை அணிவித்ததாக கூறிவிட்டு வழக்கிற்காக எதிர்மனுதாரர்கள் வரதட்சணை கேட்டதாக கூறியுள்ளது தவறு என்றால், சரியல்ல வரதட்சணையாக கேட்டார்கள் கொடுத்தோம். நான் குறிப்பிடும் நகை என்ன வகையானது என்றால், ஆரம், செயின், நெக்லஸ், மாப்பிள்ளைக்கு செயின் மற்றும் இரண்டு தோடு. வரதட்சணை கேட்டதாக கூறும் நான் அது எப்போது கேட்டார்கள் என்றால், திருமணத்தின் போதும் நகை செய்தோம், பின்பும் போதவில்லை என்று கேட்டார்கள்.

2. நகை போட்டதற்கான ஆதாரங்கள் ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், வைத்துள்ளேன் ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சீர்வரிசை பொருட்கள் பட்டியலையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். எதிர்மனுதாரர்கள் வரதட்சணை கேட்டதாக கூறும் நான் அந்த சமயத்தில் யார் எல்லாம் உடன் இருந்தார்கள் என்று விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும், சாட்சி இறந்துவிட்டார் அவர் பெயர் ஞாபகம் இல்லை. எனது பேரன் துரைச்செல்வன் தாந்தாணி அரசு தொடக்க பள்ளியில் படித்து வருகிறார். எனது பேரணை தனியார் பள்ளியில் சேர்க்க கோரி, எனது பேரன் ஆதார் அட்டையினை எதிர்மனுதாரர்களிடம் இருந்து பெற்றேன் என்றால், சரியல்ல.

3. அரசு பள்ளியில் சேர்க்க தான் கேட்டேன். நான் ஆதார் அட்டை எதிர்மனுதாரரிடம் இருந்து வாங்கும் முன்பு எனது பேரன் சிலட்டூரில் உள்ள சுவாமி

விவேகானந்தா பள்ளியில் படித்து வந்தார். CC 126/24 என்ற எண்ணின் கீழ் இந்நீதிமன்றத்தில் இரண்டாம் எதிர்மனுதாரர் கொடுத்த புகாரின் பேரில் என் மீதும் எனது குடும்பத்தாரின் மீது கொடுத்த புகாரின் மீது வழக்கு நடைபெற்று வருகிறது என்றால், சரிதான். அந்த வழக்கு முடிவுற்றுவிட்டது. எதிர்மனுதாரர்கள் எனது மகளையும், எனது பேரணையும் அடித்து விரட்டினார்கள் என்று கூறுவது பொய் என்றும், கடந்த 08.04.2023 ஆம் தேதி எனது மகன் யுகனேஷன் தான் இருவரையும் அழைத்து வந்தார்கள் என்ற ஆதாரம் எதிர்மனுதாரர்களிடம் இருக்கிறது என்றால், சரியல்ல.

4. நாங்கள் பார்க்க போனோம் எதிர்மனுதாரர்கள் சண்டையிட்டனர். எனது மகள் கருவுற்றிருந்த விவரத்தினை எதிர்மனுதாரர்கள் எனக்கு தெரிவித்தனர். எனது மகளை 1 ஆம் எதிர்மனுதாரர் வீட்டின் வெளியில் வந்து பார்த்து சென்றோம். வீட்டிற்குள் எதிர்மனுதாரர்கள் விடமாட்டார்கள். இரண்டாம் எதிர்மனுதாரர் எனது மகளை தலைமுடியை பிடித்து இழுத்து அடித்ததாக கூறுவதற்கு ஏதேனும் வழக்கு கொடுத்துள்ளேனா என்றால், இல்லை. 1ஆம் எதிர்மனுதாரர் வெளிநாட்டில் இருந்து வந்தபின்பு, எனது மகளை துன்புறுத்தியதாக கூறும் சங்கதிக்கு காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை. அதற்கான ஆதாரத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. காரணம் மகள் வாழும் வீடு என்பதால் ஆகும். எதிர்மனுதாரர்கள் வீட்டில் எனது பேரன் நான்கரை ஆண்டு இருந்தார் என்றும், எனது பேரணை எனது மகள் கேட்டு எவ்விதமான சட்ட்பூர்வமான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கவில்லை என்றால், சரியல்ல. சிலட்டூரில் பெரியவர்களை வைத்து பேசினோம். மகளிர் காவல் நிலையத்தில் 2017 ஆண்டு கொடுத்த புகார் ஆனது விளக்கு மற்றும்

5. வரதட்சணை சேர்த்தது தான். எனது மகள் 2017 –யில் என்மீது ஒரு புகார் கொடுத்து ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. எதிர்மனுதாரர்கள் எனது மகளை மிரட்டி நானும், எனது குடும்பத்தாரும் எனது மகளை சென்று பார்க்க கூடாது என்று காவல் நிலையத்தில் எழுதிக்கொடுக்க வைத்தார்கள். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல. எனது மகளை பெண் பார்க்க வரும் பொழுது எதிர்மனுதாரர்கள் அரைபவுன் நகையை எனது மகளுக்கு அணிவித்தார்கள் என்றால், சரிதான். ஆனால் எனது மகளுக்கு தாலிகட்டிய பின்பு அரைபவுன் தங்க மோதிரத்தினை திரும்ப பெற்றுக்கொண்டார்கள்.

6. ஆரம்பத்தில் குடும்பத்தில் விளக்கு பிரச்சணை ஏற்பட்டது என்று கூறும் நான் அவை எத்தனை விளக்குகள் என்றால், முதலில் இரண்டு பூர்வீக விளக்குகளும், பின்பு இரண்டு விளக்குகளும் கொடுத்தோம். நாங்கள் கொடுத்த பூர்வீக விளக்கில் ஒன்று உடைந்து இருந்தது என்றால், சரியல்ல. நன்றாக தான் இருந்தது. கடந்த 08.04.2023 ஆம் தேதி எனது மகன் யுகனேஷன் 15 நபர்களுடன் சேர்ந்து எனது மகளையும், எனது பேரணையும் எதிர்மனுதாரர்கள் வீட்டில் இருந்து தூக்கி சென்று, எதிர்மனுதாரர்கள் வீட்டினை சேதப்படுத்திவிட்டார்கள் என்றால், சரியல்ல. நான் பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விவரங்கள் பொய் என்றும், நான் எனது மகளுக்காக பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல. எதிர்மனுதாரர்களுக்கும்,

இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை**:

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/—எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**